# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண்.5

2007, ஜனவரி 27, சனிக்கிழமை

தை 13, விய – திருவள்ளுவர் ஆண்டு – 2038

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

" சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது."

(சொல்லாற்றல் படைத்தவனாகவும், சோர்வு அறியாதவனாகவும், அஞ்சா நெஞ்சங் கொண்டவனாகவும் இருப்பவனை எதிர்த்து எவராலும் வெல்ல முடியாது.)

### 1. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

#### 1) பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. சி. ஞானசேகரன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள் 2006-2007–ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் இருபத்து ஆறு மற்றும் இருபத்து ஏழாவது (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

#### 2) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

திரு. தா. உதயசூரியன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள் 2006-2007 ஆம் ஆண்டிற்கான மேற்படி குழுவின் பதினாறாவது முதல் முப்பதாவது வரையிலான (பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

### 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதமும் பதிலுரையும் (கடைசி நாள்)

கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர் :–

36. திரு. ஜி.கே. மணி
37. திரு. டி. சுதர்சனம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதிலுரை வழங்கினார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் வலியுறுத்தப்படாததால், அத்திருத்தங்கள் திரும்பப்பெறப்பட்டதாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவித்தார்.

22.01.2007 அன்று திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் அவர்களால் முன்மொழியப்பட்ட, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(1) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.3/2007)

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, திருத்தங்கள் இல்லை. பிரிவு 1 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

சட்டமாக்கும் முறையுரைக்கு ( Enacting formula ) மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிந்தார் :-

In the enacting formula, for the expression " fifty seventh " substitute the expression " fifty eighth".

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது. சட்டமாக்கும் முறையுரை திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

நெடுந்தலைப்பு திருத்தங்கள் இல்லை. நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டது.

(2) 2007-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.2/2007)

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்று கோரினார்.

சட்டமுன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டு சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 43 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 43 வரை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

பிரிவு 1, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 1 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

சட்டமாக்கும் முறையுரைக்கு (Enacting formula) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிந்தார் :-

In the enacting formula, for the expression " fifty seventh " substitute the expression "fifty eighth".

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் திருத்தத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

சட்டமாக்கும் முறையுரை திருத்தப்பட்டபடி சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

நெடுந்தலைப்பு திருத்தங்கள் இல்லை. நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஏற்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்படி சட்டமுன்வடிவு திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோரினார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டு, சட்டமுன்வடிவு திருத்தப்பட்டவாறு நிறைவேற்றப்பட்டது.

4. அறிவிப்பு

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இந்தப் பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ள இறையாண்மையைப் பாதிக்கின்ற வகையில் பேரவை நடவடிக்கைகளை விசாரணைக்கு ஆட்படுத்தி தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றம் மூலம் அனுப்பப்படும் எந்த ஒரு ஆணையோ அறிவுறுத்தலோ இப்பேரவையைக் கட்டுப்படுத்தாது. எனவே, பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பில் உள்ள பேரவைச் செயலாளரோ அல்லது செயலகத்தின் ஏனைய அதிகாரிகளோ நீதிமன்றம் மூலம் அனுப்பப்படும் எவ்வித நோட்டீசையோ, ஆணையையோ அறிவுறுத்தலையோ ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என பேரவையின் அனுமதியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

5. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்
---

சட்டமன்றப் பேரவை விதி 25(1)இன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்தார்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை நிகழ்ச்சிகள் பிறபகல் 1.03 மணிக்கு முடிவுற்று பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

மா. செல்வராஜ்,
செயலாளர்.